2010 ஏப்ரல் 8]

33—

பேருந்து வசதி

***97117—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதி, குலசேகரத்திலிருந்து வேளாங்கண்ணிக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குலசேகரம் பயணிகள் நகரப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி அருகிலுள்ள மார்த்தாண்டம் வந்து, அங்கிருந்து அதன் வழியாக வேளாங்கண்ணிக்கு இயக்கப்படும் அரசு விரைவுப் பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில்—மார்த்தாண்டத்திற்கு அடுத்து வளர்ந்து வரும் கிராமப்புறங்களில் குலசேகரம் நகரமும் ஒன்று. பல நகரங்களுக்கு மக்கள் பேருந்தில் பயணம் செய்கின்றனர். ஏற்கெனவே குலசேகரம்—சென்னை, குலசேகரம்—கோயம்புத்தூர் போன்ற பேருந்துகள் இந்த அரசால் அனுமதிக்கப்பட்டு மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வருகின்றன.

அதேபோன்று, குலசேகரம்—வேளாங்கண்ணி பேருந்து, குலசேகரத்திலிருந்து இயக்கப்பட்டால் அந்த ஊர் மக்களுக்குப் பெரிதும் பயன்படும். மார்த்தாண்டத்திலிருந்து வேளாங்கண்ணிக்கு இயக்கப்படக்கூடிய மூன்று பேருந்துகளும் மூன்று வழித்தடங்கள் மூலமாக இயக்கப்படுகின்ற காரணத்தால் பல நேரங்களில் குலசேகரம் போன்ற பகுதிகளில் இருந்து வரக்கூடிய பயணிகளுக்கு அந்தப் பேருந்துகளில் இடம் கிடைக்காத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, வரக்கூடிய காலங்களிலாவது குலசேகரம்—வேளாங்கண்ணிக்கு பேருந்துகளை இயக்குவதற்கு

[2010 ஏப்ரல் 8

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு, அமர்கின்றேன்.

முற்பகல் 10—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடம் எண் 660 மார்த்தாண்டம்—வேளாங்கண்ணி என்று இரண்டு பேருந்துகள் இயங்குகின்றன. தடம் எண் 660—C மார்த்தாண்டம்—குளச்சல்—வேளாங்கண்ணி என்று இரண்டு பேருந்துகள் இயங்குகின்றன. தடம் எண் 660—K களியக்காவிளை—வேளாங்கண்ணி இரண்டு பேருந்துகள் இயங்குகின்றன. தடம் எண் 771 திருவனந்தபுரம்—வேளாங்கண்ணி 4 பேருந்துகள் இயங்கி வருகின்றன. எனவே, இப்போது இருக்கின்ற முறையில் புதிய பேருந்துகளாக மாற்றி, இருக்கின்ற அந்தப் பயணிகள் அடர்விலே, இந்த அளவிற்குத்தான் இயக்கக்கூடிய வசதி வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, வருங்காலத்தில் பயணிகளுடைய அடர்வு அதிகமாக இருக்குமானால், அதைப்பற்றி பிறகு பரிசீலித்து, பேருந்து விடுவதற்கு உரிய ஏற்பாடு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. கிராமப்புறங்களில் ஒரே வழித்தடத்தில் ஒரே ஒரு பேருந்து மட்டும் single route பேருந்துகள்—அதுவும் வெளி மாவட்டங்களில் நடைபெறும் திருவிழாக்களின்போது மாற்றி விடப்படுவதால், கிராமப்புறங்களிலே இருக்கக்கூடியவர்கள், குறிப்பாக மாணவர்கள் உட்பட ஒரு வாரத்திற்குமேல் பெரிதும் சிரமப்படுகின்றார்கள். இதைத் தடுத்து நிறுத்தவும்,——பெரும்பாலான பேருந்துகள் பயணம் செய்ய முடியாமல் பழஸ்மையான பேருந்துகளாக இயங்கி வருகின்றன.——பழமையான பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகளை அனுமதிக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதே கேள்வியைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நேற்று திருவண்ணாமலையில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன் அவர்களும் கிராமப்புறத்தில் இருக்கின்ற பேருந்துகள் பழமையாக இருக்கின்றன. நகர்ப்புறத்திலே புதிய பேருந்துகளாக விட்டிருக்கிறார்கள். எனவே, கிராமப்புறத்திற்கும் விட வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். குறிப்பாக, தமிழ்நாடு அரசின் சார்பாக 2006 ஆம் ஆண்டு இருந்த மொத்தப் பேருந்துகளுடைய எண்ணிக்கை 18,200 பேருந்துகள். இன்றைக்கு இருக்கக்கூடிய மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை 20,230 பேருந்துகள். கூடுதலாக வருடந்தோறும் இந்த 4 ஆண்டு காலத்தில் புதிய வழித்தடங்கள் என்ற வகையிலே 2 ஆயிரம் புதிய வழித்தடங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. புதிய தட நீட்டிப்பு என்ற வகையிலே 3 ஆயிரம் தடங்கள் தட நீட்டிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வளவுக்கும் 20,230 பேருந்துகளில் இதுவரை 12,300 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டிருக்கின்றன. மீதம் இருக்கின்ற 3 ஆயிரம் பேருந்துகள் இப்பொழுது இந்த மானியக் கோரிக்கையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். இன்னும் ஒரு வருடம், 6 மாதத்தில் 100 சதவிகிதம், இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு ஏற்கெனவே ஓடிக்கொண்டிருந்த பழைய பேருந்துகள் அனைத்துமே புதிய பேருந்துகளாக விடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

இப்பொழுது உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 2006 ஆம் ஆண்டு இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை 717. இந்த 4 ஆண்டுகளில் 805 புதிய வழித்தடங்கள், கிட்டத்தட்ட 108 வழித்தடங்கள் புதிதாக அங்கே உருவாக்கப்பட்டிருக்கின்றன. சர்வீஸ்கள் என்று எடுத்துக்கொண்டால், நகரப் பேருந்துகள் 2006–லே 394 வழித்தடங்களிலே இயக்கப்பட்டன. இந்த 4 ஆண்டு காலத்தில் மட்டும் 447 வழித்தடங்களிலே இயக்கிக்கொண்டிருக்கிறோம். கூடுதலாக நகரப் பேருந்துகள் 52 அங்கே இயங்கிக்கொண்டிருக்கின்றன. புறநகர்ப் பேருந்து என்று எடுத்துக்கொண்டால், 2006 ஆம் ஆண்டு 278 வழித்தடங்கள், இப்பொழுது 327 வழித்தடங்கள். 56 வழித்தடங்களிலே புதிய வழித்தடங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆக, நாகர்கோவில்

[2010 ஏப்ரல் 8

கோட்டத்திலே 2006—லே 665 வழித்தடங்கள் இருந்தன. இப்பொழுது 773 வழித்தடங்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 108 வழித்தடங்கள் ஒரு மாவட்டத்தில் மட்டும் புதியதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. நாகர்கோவில் வட்டத்தில் இருக்கின்ற 773 வழித்தடங்களில் இந்த 4 ஆண்டு காலத்தில் மட்டும் 432 புதிய பேருந்துகள் உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே 2006 ஆம் ஆண்டு ஒரு பேருந்தினுடைய சராசரி வயது 7.87 என்று இருந்ததை, இந்த 4 ஆண்டு காலத்தில் 6.3 என்று குறைத்திருக்கிறோம். இதெல்லாம் தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் செய்யப்படுகிறது. இதிலே நாகர்கோவில் மாவட்டம், மற்ற மாவட்டங்களிலே இப்படித் தொடர்ந்து இயக்குகின்ற காரணத்தால் நாள் ஒன்றுக்கு ஒரு கிலோ மீட்டருக்கு மைனஸ் 3 ரூபாய் 16 காசு நஷ்டம். நீங்கள் ஒவ்வொரு வழித்தடம் உருவாக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். அந்த வழித்தடங்களிலே புதிய பேருந்துகள் விடப்படுகின்றன அல்லது பழைய பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆனால் வரவுக்குச் செலவு—break even என்று சொல்கின்றபோது, ஒரு கிலோ மீட்டர் இயக்கினால் 3 ரூபாய் 16 காசு நஷ்டம். இருந்தும், அந்த நஷ்டத்தை இந்த அரசு ஏற்றுக்கொண்டு தொடர்ந்து வருடந்தோறும் 3 ஆயிரம் புதிய பேருந்துகளை வாங்கி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10—05

நேற்று திரு. போளூர் வரதன் சொன்னார். திரு. போளூர் வரதன், அவருடைய மாவட்ட அமைச்சரிடம் அனைத்தையும் கேட்டார், இதையும் கேட்டிருக்க வேண்டும்; கேட்காமல் விட்டதுதான் தப்பு. அனைத்தையும் மாவட்ட அமைச்சரிடம் கேட்டவர் இதைக் கேட்டிருக்க வேண்டாமா, எவ்வளவு பேருந்துகள் தந்திருக்கிறார்கள் என்று. உங்களுடைய திருவண்ணாமலை மாவட்டம், 21—1—2007—லே தனி வட்டமாகத் தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்டபோது 99 பேருந்துகள் இருந்தன, தற்போது 20 நகரப் பேருந்துகளையும் சேர்த்து 119 பேருந்துகளாக அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன. புறநகர்ப் பேருந்துகள் முதலிலே 234 என்று இருந்தது, இன்றைக்கு 323 பேருந்துகள், தொடர்ந்து 109 வழித்தடங்கள் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஸ்பேர் பஸ்கள் 29 என்று இருந்தது, 42 புதிய ஸ்பேர் பஸ்களாக இயக்கப்பட்டிருக்கின்றன. புதிய பேருந்துகளைப் பொறுத்தவரையில், இந்த 3 வருடத்தில், உங்களுக்கு

2010 ஏப்ரல் 8]

ஒதுக்கப்பட்டபோது ஒரு பேருந்தினுடைய சராசரி வயது 4.58 வருடம். ஆனால், இப்போது அதை 4 வருடங்களாகக் குறைத்திருக்கிறோம். எனவே, நீங்கள் நகரத்திற்கு வந்து, கிராமத்திற்குச் செல்கின்றபோது இங்கிருக்கின்ற பேருந்துகளையெல்லாம் பார்த்துவிட்டு அங்கு போனவுடன், அது புழுதி அடித்து கருப்பானவுடன் பழைய வண்டி என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. வண்டியை நல்ல கண்டிஷனாகத்தான் ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். எங்கேயாவது பேருந்து நிற்கிறதா? நீங்கள் பிரேக் டவுன் என்பதைப் பார்த்தால்கூட, பிரேக் டவுன் அந்தக் காலத்தைவிட இன்றைக்கு நாங்கள் சர்வீஸிலும் சரி, பிரேக் டவுனிலும் சரி, 0 சதவிகிதத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். இப்படித் தொடர்ந்து அதைப் பராமரித்து, செயல்படுத்திக்கொண்டிருக்கிற காரணத்தால், 7, 8 ஆண்டு காலமாக மாற்றப்படாத பேருந்துகளை 3, 4 ஆண்டுகளிலே இவ்வளவு தூரம் மாற்றியிருக்கின்றபோது அதைப் பாராட்ட மனமில்லை என்றாலும், குறை சொல்லாமலாவது இருக்க வேண்டும். எனவே, மாவட்ட அமைச்சரை நன்கு கேட்டு அறிந்துகொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் போக்குவரத்துத் துறையினுடைய அத்தனை சூட்சுமங்களையும், மர்மங்களையும் அறிந்தவர்கள். எப்படிப் பேருந்துகளை இயக்கினால் பொது மக்களை மகிழ்ச்சிக்குள்ளாக்க முடியும், சட்டமன்ற உறுப்பினர்களைத் திருப்திப்படுத்த முடியும் என்று அறிந்தவர். ஆனால், 22 ஆயிரம் பேருந்துகள் ஓடுவதாகச் சொல்கிறார். புதிதாக கடந்த 4 ஆண்டுகளிலே ஏறக்குறைய 12 ஆயிரம் பேருந்துகள், 3 ஆயிரம் பேருந்துகள் ஆண்டு ஒன்றுக்கு என்று சொன்னால், 12 ஆயிரம் பேருந்துகளை அரசு வழங்கி இருக்கிறது. (குறுக்கீடு) 15 ஆயிரம் பேருந்துகளை வழங்கியிருக்கிறது. நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலமாக நான் என்ன அறிய விரும்புகிறேன் என்று சொன்னால், இந்த 15 ஆயிரம் பேருந்துகளையும் மக்களுடைய வரிப் பணத்திலிருந்து நாங்கள்தான் உங்களுக்குத் தந்திருக்கிறோமேயொழிய, நீங்கள் பேருந்துகளை

ஓட்டி அதன்மூலமாக இலாபம் சம்பாதித்துப் பேருந்துகளை வாங்கி இருக்கிறீர்களா? ஏனென்று சொன்னால், இரண்டு பஸ் விட்டவர்கள் 3 பஸ் விடுகிறார்கள். ஆனால், 20 ஆயிரம் பேருந்துகளை இயக்குகின்ற உங்களாலே போக்குவரத்துக் கழகங்களுடைய வரவு—செலவைப் பார்க்க முடியாமல், அதற்கு ஏற்படுகிற பேரிழப்புகளைச் சமாளிக்க முடியாமல், விபத்துக்குள்ளாகிற பொது மக்களுக்குக்கூட நஷ்ட ஈட்டைத் தர முடியாமல் அந்தப் போக்குவரத்துக் கழகங்கள் இயங்குகின்றனவே, இதற்கு என்ன காரணம்; அதில் என்ன மர்மம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலம் அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு முழுக் காரணமும் சட்டமன்ற உறுப்பினர்கள்தான். (சிரிப்பு) எந்த வழித்தடத்திலே பேருந்துகளை இயக்கினால் பயணிகள் அதிகமாக ஏறி இறங்குவார்கள் என்ற கணக்கு இருக்குமானால், அதை ஏற்றுக்கொண்டு அந்த வழித்தடங்களிலே பேருந்துகளை விட வேண்டுமென்று சொன்னால், நகரப் பேருந்து என்று சொன்னால் நாள் ஒன்றுக்கு சராசரியாக 5,500 ரூபாய் வசூலாக வேண்டும், புறநகர்ப் பேருந்து என்று சொன்னால், 8,500 ரூபாய் வசூலாக வேண்டும்—இது ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும்—இது நாகர்கோவிலைப் பொறுத்தவரை 3 ரூபாய் 19 காசு. ஆனால், ஒவ்வொரு கிலோ மீட்டரைப் பொறுத்தளவு 2 ரூபாய் 80 காசு என்ற அளவிலே தமிழ்நாடு முழுவதும் நஷ்டத்திலேதான் இயக்கிக் கொண்டிருக்கிறோம். காரணம், முதலிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறச் சாலைகள் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். 1,500 மக்கள் இருக்கக்கூடிய இடத்தில் சாலை இணைக்கப்பட்டது. தொடர்ந்து 500 மக்கள் இருக்கக்கூடிய அளவுக்கே இன்றைக்கு சாலைகள் இணைக்கப்படுகின்றன. அதுபோல் பேருந்துகள் வந்தபோதும் 1,000 மக்கள் என்றும், 500 மக்கள் என்றும், இன்றைக்கு 150 மக்கள் இருக்கின்ற இடத்திற்குக்கூட பேருந்து விட வேண்டுமென்று நம்முடைய அரசு ஆணையிட்டிருக்கிறது. எனவே, இந்தத் துறை என்பது இலாபம் சம்பாதிக்கின்ற துறை அல்ல, மக்களுக்குச் சேவை செய்கின்ற துறை. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே,

2010 ஏப்ரல் 8]

சேவை செய்கின்றபோது மக்களுடைய வரிப் பணத்திலிருந்துதான் செய்ய வேண்டியிருக்கிறது.

இன்னும்கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்லி, அவருடைய பகுதியில் மட்டும் 10 புதிய வழித்தடங்களை நானே சென்று அமைத்துவிட்டு வந்தேன். அதுகூட நஷ்டத்தில்தான் இயங்குகின்றது. எனவேதான், உங்களுக்கு நல்ல பெயர் வருவதற்காக நாங்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம், அதுதான் உண்மை. இப்போது ஒரு உறுதியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்து, 3,000 புதிய பேருந்துகளைத் தந்திருக்கிறார்கள். இன்னும் 5,000 பேருந்துகளைத் தருவார்களேயானால், 100 சதவிகிதம் புதிய பேருந்துகள் வந்துவிடும். அதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறோம். விரைவில் அவர்களும் தருவதாக ஒப்புதல் தந்திருக்கிறார்கள்.

வெகுவிரைவில் நல்ல பேருந்துகளாக, மீண்டும் நீங்கள் தேர்தலுக்குச் செல்லுகின்றபோது உங்களுக்கு நல்ல பெயர் வருகின்றபடி இந்தத் துறை நிச்சயமாக நடக்கும்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

34—

சிகிச்சை வசதி

***61228—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம், மறவமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள் நோயாளிகளுக்கான வசதிகளுடன் முழு நேர சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்